**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.41/2025 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. கலையரசன் |
| Husband/Father Name | செல்வம் |
| Village /Area | புதுப்பேட்டை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலிவேலை |
| Age | 43 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.08.2025.

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 14.01.2020 அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் நானும் எனது சகோதரன் யுவராஜ் என்பவரும் மது அருந்திவிட்டு பழனிபேட்டை காந்திரோடு சந்து அருகே வந்துக்கொண்டிருந்தோம். அங்கு கும்பலாக நின்று கொண்டிருந்தாவர்கள் வழிவிட மறுத்ததால் வழிவிடுமாறு கேட்டேன். அப்போது கும்பலாக நின்று கொண்டிருந்தாவர்களில் சிலர் என்னை அடித்து விட்டார்கள். சம்பவ இடத்தில் ஆள் தெரியவில்லை நான் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சகையில் இருந்தேன். மேல் சிகிச்சைக்காக இராஜீவ் காந்தி அரசு மருததுவமனையில் உள்நோயாளிகாக சிகிச்சையில் இருந்தேன். அப்போது அங்கு வந்த அரக்கோணம் நகர காவல் உதவி ஆய்வாளர் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். சம்பவத்தின் போது அந்த வழியாக ரஞ்சித்குமார் மற்றும் செல்வகுமார் ஆகியோர்கள் சென்றார்கள்.

அவர்கள் மீதுள்ள சந்தேகத்தின் பேரில் அவர்கள் மீது புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் சொன்ன வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட புகார் அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்து போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட புகாரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது. போலீசார் என்னிடம் வெள்ளை தாளில்தான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரிதான். போலீஸ் விசாரணையிலும் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை தான் கூறினேன் என்று சொன்னால் சரிதான்.

**(ஒம்./--) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**